354
2.61



சிந்தனைக் குழுவின்

# கல்விப் பணி

வரிசை

## கல்வியும் மொழியும்

T
N61
113297

20 காசு

T
N61



○ ● ○

"நம்முடைய இளைஞர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்புள்ளவர்கள், சற்று மனம் வைத்து யோசித்துப் பார்த்தால், குழந்தையின் உடல்வளர்ச்சிக்கு தாய்ப்பால் எப்படியோ அப்படி மனிதன் மன வளர்ச்சிக்குத் தாய்மொழியே இயற்கையானது என்பதை உணர்வார்கள். வேறெப்படி இருக்கமுடியும்? குழந்தை, தன் முதல் பாடத்தைக் கற்பது தாயிடமிருந்துதானே? ஆகவே, குழந்தைகளின் உள வளர்ச்சிக்குத் தாய்மொழியையல்லாது வேறொரு மொழியை அவர்கள் மீது சுமத்துவது தாய்நாட்டிற்குச் செய்யும் பெரிய பாபம் என்றே நான் கருதுகிறேன்."

—காந்தியடிகள்

சிந்தனைக் குழுவின்
கல்விப் பணி வரிசைக்கு
வழிகாட்டும்
அறிவுரைக் குழுவினர் :
டாக்டர் மு. வரதராசனார்,
பல்கலைச் செல்வர்
தே. போ. மீனாட்சிசுந்தரனார்,
திரு. க. அருணாசலம்,
டாக்டர் மு. அறம்,
திரு. ம. ரா. போ. குருசாமி
செயலர் :
திரு. ர. சீனிவாசன்,
திரு. அ. தேவராசன்.
* * *
**(190, இராச வீதி, கோவை)**

# முன்னுரை

சில ஆசிரிய நண்பர்களின் சிறிய கூட்டம் — சிந்தனைக் குழு. அடிக்கடி கூட்டுச் சிந்தனையில் ஈடுபட்டுப் பல சிக்கல்கள்பற்றி ஆராய்வதும், சிக்கல் தீரும் வழியைப்பற்றி எண்ணுவதும் அதன் வேலைத் திட்டம்.

இப்போது முதன்முதலாக வெளியே தன் உருவத்தைக் காட்டுகிறது. பொதுவாகக் கல்வித் துறைபற்றியும் குறிப்பாகப் பயிற்சிமொழி பற்றியும் தெளிவு ஊட்ட முயல்வதே சிந்தனைக் குழுவின் நோக்கம். பல நல்லறிஞர்களின் கருத்துக்களைத் தொகுத்துச் சிறு சிறு சுவடிகளாக வழங்குகிறோம்.

'கல்வியும் மொழியும்' என்ற பெயரில் வருவது முதல் சுவடி. மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட கல்வி உலகத்துக்கே இது உரியது. கட்சிப் பாங்கு படியாதவண்ணம் கருத்துக்கு உரமூட்டும் சிந்தனை அலைகளை எழுப்புவதே எம் நாட்டம்.

— சிந்தனைக் குழுவினர்.

செம்மையான திருப்பணி புரியும்
கல்லூரித் தமிழ்க் குழுவின்
தலைவர் திரு. **ஜீ. ஆர். தாமோதரன்**
**வாழ்த்துகிறார்**

சிந்தனைக் குழுவினர் தொடங்கவிருக்கும் கல்விப் பணி வரிசை சிறந்த நோக்கங்கள் கொண்டுள்ளது என்பதை அறிந்து மிகவும் மகிழ்கிறேன்.

தமிழ் நாட்டில் தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்குவதற்குக்கூடத் தடைகள் எழுப்புகிறார்கள் சிலர். தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்குவதால் கல்வியின் தரம் குறைந்துவிடுமோ என்று அஞ்சுகின்றனர் சிலர். ஆங்கிலமே எல்லாம் என்று கருதுவோர் உண்டு; ஆங்கிலமே வேண்டாம் என்று நினைப்போரும் உண்டு.

இவ்வாறு கல்வித்துறையில் வேண்டாத குழப்பங்கள் பல ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் பொதுவாக மக்களிடையேயும் — குறிப்பாக மாணவரிடையேயும் — கல்வித்துறை பற்றிய சிந்தனைகளைத் தூண்டிவிட்டுத் தெளிவு காண உதவுவது சீரிய திருப்பணியாகும். இப்பணியை மேற்கொண்டுள்ள சிந்தனைக் குழுவினரைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

கல்விப்பணி வரிசையின் பணிகளை ஆர்வத்தோடு வரவேற்கிறேன். முயற்சி சிறந்திடுக.

(ஒப்பம்) *தாமோதரன்.*



# எதன் மூலம்?

திரு தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார்

உயர்நிலைப் பள்ளிக் கல்வியில், பயிற்சி மொழியாக இருந்த ஆங்கிலம் அகற்றப்பட்டு வட்டாரமொழி (Regional language) பயிற்சி மொழியாக ஏற்படுத்தப்பட்டது. இது உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் அறிவுப் பெருக்கத்துக்கு உரிய வழிகளை மிகுதியாக்கியது என்பதை நாம் நடைமுறையில் அறிந்துள்ளோம். தற்போது உயர்நிலைப் பள்ளிகளில் கல்வித் தரம் குறைந்து வருவதாகப் பலர் பொதுவாகக் கூறுகின்றனர். அவர்கள், முன்பு ஆங்கிலம் பயிற்சி மொழியாக விளங்கிய போது இருந்த உயர்நிலைப்பள்ளிக் கல்வியையும், தற்போதுள்ள உயர்நிலைப்பள்ளிக் கல்வியையும் விரிவாக ஆராய்ச்சி செய்யாதவர்கள்.

சொந்த மொழிகளின் மூலம் கற்பிக்கப்படுவதால், குழந்தைகள் முன்னைவிடத் தற்போது பாடங்களை நன்கு விளங்கிக்கொள்கின்றனர். இன்றைக்கும் எஸ். எஸ். எல். சி. தேர்வுகளில் தேர்ச்சி பெறாதவர் எண்ணிக்கையைக் கணக்கிடுவோமானால், அவர்களில் ஏறத்தாழ 70 முதல் 80 சத வீதத்தினர் ஆங்கிலத்திலேயே தேர்ச்சி பெறவில்லை என்பது விளங்கும். ஆங்கிலம் அவர்களின் பயிற்சி மொழியாகவும் இருந்திருக்குமானால், அவர்களின் அறிவு ஆழமற்றதாக இருந்திருக்கும்; தேர்ச்சி பெறாதோர் எண்ணிக்கையும் உயர்ந்திருக்கும். குறிப்பிட்ட ஒருசிலரே, குறிப்பிட்ட சில இனங்களே கல்வி கற்க வேண்டும் என்றிருந்தால், ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். ஆனால் கல்வியை எல்லா மக்களுக்கும், பொதுவாக்க விரும்பினால், கல்வி கற்கும் வாய்ப்பை எல்லா வகுப்பினர்க்கும், எல்லா இனங்களுக்கும் வழங்கவிரும்பினால், வட்டாரமொழிகளைப் பயிற்சி மொழிகளாக்குவதன் மூலமே அது இயலும்

போதிய அளவு பாடநூல்களும் படிக்கும் நூல்களும் வட்டார மொழியில் இல்லை என்று ஒரு குறை கூறப்படுகிறது. நாட்டின் தீப்பேறு காரணமாக, இங்கு உயர்படிப்புப் படித்தவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக உள்ளது. பள்ளிகளும், கல்லூரிகளுமே பாட நூல்கள் விலையாகும் இடங்களாக நீடித்துள்ளன. இக்காரணத்தால், ஆங்கிலம் பயிற்சி மொழியாக நீடிக்கும் வரை, பாட நூல்கள் வட்டார மொழிகளில் வெளியாகவே இயலாது. வட்டார மொழிகளில் அவை வெளியிடப்பட்டாலும், அவை விற்பனையாக வழி கிடையாது. எனவே கல்லூரிகளில் வட்டார மொழியைப் பயிற்சி மொழியாக்க முடியாது என்ற கொள்கையை நாம் எதிர்ப்படுகின்றோம். குறைந்த காலத்துக்குள், விரைவில், நம் சொந்த மொழியில் வேண்டிய அளவு பாட நூல்களை உண்டாக்கிக்கொள்ள இயலும் என்பது என் நம்பிக்கை. ●

# புதிய சமுதாயம் உருவாக...



திரு. சி. சுப்பிரமணியம்
(கல்வி, நிதி அமைச்சர்)

புதிய சமுதாயத்தை வகுப்பதில் நாம் எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய முயற்சிகளில், இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது என்னுடைய கருத்து. இன்றைக்குப்புதிய புதிய மாறுதல்கள், புதியபுதிய திறமைகள் மக்களிடத்திலே தோன்ற வேண்டும் என்று சொன்னால், எந்த அளவிற்குச் சிந்தனைசக்தி மக்கள் மனத்திலே உயர்கின்றதோ அந்த அளவிற்குத்தான் நாம் இத்துறையிலே முன்னேற்றம் காணமுடியும். அப்பேர்ப்பட்ட சிந்தனைசக்தி நமது இளைஞர்கள் மனத்திலே மேலும் மேலும் பெருக வேண்டும். அதற்கு உறுதுணையாகக் கல்வித் திட்டம் அமைய வேண்டும் என்பதுதான் இன்றைக்கு எல்லோரின் கருத்தாகவும் இருக்க வேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் இருப்பதற்கே இடம் இல்லை. அந்த முறையில் நம்முடைய கல்வித் திட்டம் எப்படி அமைய வேண்டும் என்பதைப் பற்றியும் கருத்து வேறுபாடு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

ஆனால், அந்த லட்சியத்தை அடைவதற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சிகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதிலே சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அதிலும் நாம் இன்று எடுத்திருக்கக்கூடிய ஒரு முயற்சி கல்லூரிகளிலேயும் போதனாமொழி தமிழாக வேண்டும் என்பதைப் பற்றியதாகும். அதை இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றாவது ஒரு காலத்தில் ஏற்படுத்தித்தான் தீர வேண்டும். இன்றைக்கு நம் நாட்டிலே இருக்கக்கூடிய பெரியவர்களாகஇருந்தாலும் சரி, வெளிநாட்டிலே இருக்கக்கூடிய பேரறிஞர்களாக இருந்தாலும் சரி, தொடர்ந்து வேற்றுமொழி மூலம்தான் பாடங்களைக் கற்றாகவேண்டும், அல்லது தலைமுறை தலைமுறையாக அவ்வாறுதான் இருக்கவேண்டும் என்று சொல்லக்கூடியவர்களை நான் இதுவரையில் பார்த்ததும் இல்லை; கேட்டதும் இல்லை. ஆனால், அந்த லட்சியத்தை எப்படி நிறைவேற்றுவது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் நம்மிடையே இருக்கின்றன என்பதை நான் காண்கிறேன். இதிலே நாம் எடுக்கக்கூடிய முயற்சி இந்தக் கருத்து வேறுபாடுகள் இல்லாமல் ஒன்றுபட்ட முயற்சியாக இருக்கவேண்டும் என்பதுதான் நான் விரும்புவது. இதுதான் என்னுடைய அவா.



# சிந்தனையில் அடிமை விலங்கு

★

மு. வரதராசனார்

ஒரு குடும்பத்தில் பிறந்தவர்களே நாட்டை ஆள்வதற்கு உரியவர்கள்; மற்றவர்கள் ஆளப்படுவதற்கு உரியவர்கள்: இப்படி உலகம் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்தது. ஆட்சியுரிமை பிறப்பின் காரணமாக அமைவது பொருந்தாது என்றும், ஆற்றலின் காரணமாகவே அமைய வேண்டும் என்றும் மாறுதல் தோன்றியது. படை வலிமை குறைந்த அரச குடும்பத்தை அழித்தோ அடக்கியோ படை வலிமை மிகுந்த குடும்பம் ஆளத் தொடங்கியது. அரச குடும்பங்கள் அடிக்கடி மாறும் நிலைமை ஏற்பட்டது. பிறகுதான் ஆட்சிப்பொறுப்புக்கும் குடும்பப் பிறப்புக்கும் தொடர்பு இல்லை என்ற தெளிவு ஏற்பட்டது. அதன் பயனாக, காலப் போக்கில், முடியாட்சி முடிந்தது; குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படுவோர், அல்லது குடிமக்களை மந்தையாய் நடத்த வல்லோர் ஆட்சித் தலைவராய் அமரும் நிலைமையை உலகம் கண்டது.

ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆள்வதும் அது பொருத்தமெனக் காரணம் காட்டுவதும் உலக வரலாற்றில் தொடர்ந்து இருந்துவந்தன. "ஆற்றல் மிகுதியால் உங்களை ஆளும் தகுதி பெற்றுள்ளோம். நாங்கள் ஆளப் பிறந்தவர்கள்" என்று சிலர் திமிர் புலப்படுத்தினர். "நாங்கள் அறிவாலும் நாகரிகத்தாலும் மேம்பட்டவர்கள். ஆதலின் உங்களை ஆண்டு உங்களுக்கு அவற்றை உணர்த்தவே இருக்கிறோம்" என்று சிலர் தந்திரம் புலப்படுத்தினர். இந்த நூற்றாண்டில் உலகம் முன்னேறியது. இரண்டும் தவறு என்று அறிஞர் உணர்த்தினர். ஆகவே, வல்லரசுகளும் இன்று அந்தக் காரணங்கள் கூறிப் பிறரை அடிமைப்படுத்த முடிவதில்லை.

படை வலிமையால் பிறரை அடக்கி ஆளும் கொடுமை மறையும் தறுவாயில், பொருள் வலிமையால் (யந்திர முன்னேற்றத்தின் துணையால் பொருள்களைப் பெருக்கும் திறமையால்) மற்ற நாடுகளைத் தம்கீழ் வைத்திருக்கும் முறை தோன்றியது. அது மறைமுகமானதே ஆயினும், ஆள்வோர் அடிமை என்ற வேறுபாடு இல்லை எனினும், உயர்வு தாழ்வுக்கு இடம் இருக்கிறது. அதனால், உலக முன்னேற்றம் தடைப்படுகிறது. இந்தக் குறை தீரும் காலமும் வரும்; வந்தே தீரும்.

படை வலிமை, பொருள் வளம் இவற்றால் அமையும் வேறுபாடு போலவே, அறிவு வளம் பற்றிய வேறுபாடும் உள்ளது. சில நாடுகள் சென்ற நூற்றாண்டிலிருந்தே அறிவுத் துறையில் வேகமாக முன்னேறியுள்ளன. சில நாடுகள் இந்த நூற்றாண்டில்தான் முன்னேறத் தொடங்கியுள்ளன. சில நாடுகள் நேற்றும் இன்றுமே முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

நம் நாடு நெடுங்காலமாகவே அறிவு வளம் பெற்றிருந்த நாடு. அரசியலில் அடிமைப்பட்டிருந்த காரணத்தாலும், பொருள் வளம் குன்றிய காரணத்தாலும், இரண்டு நூற்றாண்டுக் காலமாக உலக முன்னேற்றத்தோடு ஒத்துச் செல்லவில்லை; சிறிது உறங்கியதுபோல் கிடந்துவிட்டது. அதனால் பின் தங்கிவிட்டது.

இன்று நம் நாடு ஆட்சியுரிமை பெற்று விளங்குகிறது; பொருள் வளமும் பெறப் பாடுபடுகிறது. இங்கிலையில் அறிவு வளமும் பெறுவது இன்றியமையாதது. ஆனால், ஒரு முட்டுக்கட்டை உள்ளது. அது என்ன?

ஒரு நாட்டு மக்கள் எந்த மொழியில் சிந்தனை செய்யும் திறன் பெற்றிருக்கிறார்களோ, அந்த மொழியின் வாயிலாகவே அறிவை வளர்க்க முடியும்-இது உலகறிந்த உண்மை. தமிழ்நாட்டு மக்கள் இளமைமுதல் தமிழே பேசி, தமிழிலே எண்ணி வளர்வதால், தமிழ் மக்கள் அறிவு வளம் பெற வேண்டுமானால், தமிழின் வாயிலாகவே அது முடியும்.

ஆனால், அறிவு நூல்கள் ஆங்கிலத்தில் மிகக் குவிந்துள்ளன என்பதைக் காட்டி, 'ஆங்கிலத்தின் வாயிலாகவே கல்வி கற்க வேண்டும்' என்று அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். 'ஆங்கில நூல்களைத் துணை நூல்களாக (reference books) பயன்படுத்திக்கொள்வோம்'என்று கூறினாலும் அவர்கள் இசையவில்லை. 'தமிழால் அறிவு வளர்க்க முடியாது, முடிந்தாலும் அது பயன்படாது, ஆகவே கூடாது' என்கின்றனர்.

இன்று படை வலிமையால் அடிமைப்படுத்துவோர் இல்லை; அடிமைப்படுவோரும் இல்லை. பொருள் வலிமையால் அடிமைப்படுத்தும் முயற்சி உள்ளது; ஆனால் அடிமைப்படும் விருப்பம் இல்லை. அறிவு வளத்தைக் காட்டி அடிமைப்படுத்துவோர் இல்லை; ஆனால் அடிமையாக விரும்புவோர் உள்ளனர்.

பிறமொழியின் வாயிலாகக் கல்வி கற்பது அடிமைத்தன்மையா என்று கேட்கலாம். அடிமைத்தன்மை என்பது என்ன? வலிமை நோக்கியோ, பொருள் கருதியோ தன்னம்பிக்கை இல்லாமல் உரிமை இழந்து பிறரைச் சார்ந்து வாழ்வது தான் அடிமைத்தன்மை. அறிவுத் துறையில் தாய்மொழி வாயிலாகப் பயில்வதுதான் தன்னம்பிக்கை ஊட்டுவது; சிந்தனையை வளர்ப்பது. பிறமொழியின் வாயிலாகப் பயில்வது, அத்தகைய தன்னம்பிக்கையை அளிப்பதில்லை; காலமெல்லாம், பிறமொழி நூல்களையே சார்ந்திருக்கச் செய்யும். இது மூளை வளர்ச்சியில் வந்து சேரும் அடிமைத்தன்மை யாகும். இதற்கு வேறு சான்றுகள் தேடிப் போகவேண்டியதில்லை. இதுவரையில் ஆங்கிலத்தின் வாயிலாகப் பயின்று பெரிய பட்டங்கள் பெற்றவர்கள் பெரும்பாலோரின் வாழ்க்கையை ஆராய்ந்தால் போதும். அவர்கள் தன்னம்பிக்கை இல்லாமல் நாட்டுக்கும்

பயன்படாமல் வாழும் வாழ்வு-சிந்தனையை வளர்க்காமல் ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் உருட்டி மருளும் வாழ்வு-போதிய சான்றாக உள்ளது.

ஆகவே, மற்றத் துறைகளில் அடிமை மனப்பான்மையை ஒழித்து வளர முற்பட்டது போலவே அறிவுத் துறையிலும் வளம்பெற்று வாழ வேண்டுமானால், தாய்மொழியின் வாயிலாகக் கல்வி கற்கும் முறையைப் போற்ற வேண்டும். அரசியல், வாணிபம் முதலிய துறைகளில் பிற நாடுகளின் உறவை நாடுவதுபோல், அறிவுத் துறையிலும் பிறமொழிகளின் உறவை நாடலாம். ஆனால், உறவு உதவி நல்க வேண்டுமே அல்லாமல், அடிமை மனப்பான்மைக்கு இடந்தரல் ஆகாது. ●

"இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வம் மாகாணத்துக்கெனத் தனித்தனி மொழியும் அமைந்திருக்கிறது. அவ்வம் மொழியினர் அவ்வம் மொழி வழிக் கல்வி பெறுவதே இயற்கை."

— தமிழ்த் தந்தை திரு. வி. க.



# சொந்த நாட்டில் அந்நியர்

காந்தியடிகள்



தாய்மொழியிலன்றி அந்நிய மொழிமூலம் கல்வி கற்பதால் ஏற்படும் தீமைகள் பல. நம் பிள்ளைகளின் மூளை சோர்வுறுகின்றது. அவர்கள் நரம்புகளின்மீது அளவுக்கு மீறிய பாரம் சுமத்தப்படுகின்றது. அவர்கள் மனப்பாடம் செய்யும் கிளிப்பிள்ளைகள் ஆகிவிடுகின்றார்கள். சொந்தமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் சக்தியற்றுப் போய்விடுகிறார்கள். கற்கும் கல்வியைத் தங்கள் குடும்பத்திலோ அல்லது பொதுமக்களிடமோ அவர்களால் பரப்ப முடிவதில்லை. அந்நிய நாட்டு மொழிமூலம் கல்வி கற்பதால் நம் பிள்ளைகள் சொந்த நாட்டிலேயே அந்நியர்போல் ஆகிவிடுகின்றனர். தற்காலக் கல்வி முறையினால் ஏற்பட்டுள்ள வருந்தத்தக்க விளைவு இதுவாகும். அந்நியமொழி, பயிற்சி மொழியாக இருப்பது நம் மொழிகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் எனக்கு இருக்குமென்றால், நான் இன்றே நம் சிறுவர்கள் அயல் மொழி மூலம் கல்வி கற்பதை நிறுத்திவிடுவேன். எல்லா ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் உடனே தாய்மொழியின் மூலம் கற்பிக்கும்படியாகக் கட்டளை இடுவேன். இம்மாற்றத்தை எதிர்ப்பவர்களை வேலையிலிருந்து விலக்கிவிடுவேன். பாடப் புத்தகங்கள் தயாராகும்வரை நான் காத்திருக்க மாட்டேன். பயிற்சி மொழி மாறிய பின் அவை தாமாகவே வந்துவிடும். அந்நியமொழி மூலம் கல்வி கற்பிக்கும் இக் கேட்டுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்.

இன்றைய கல்வி நமது இந்தியத் தன்மையைக் கெடுக்கின்றது. இப் பொய்க் கல்வி நம் லட்சக் கணக்கான மக்களுக்குத் தொடர்ந்து செய்துவரும் கெடுதியை நான் நித்தம் கண்ணாரக் காணுகின்றேன். இத் தீமை மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. என் மதிப்பிற்குரிய தோழர்கள் பலர் பட்டதாரிகள். அவர்கள் தங்கள் மனத்தில் உள்ளூர எண்ணுவதைத் தாய்மொழியில் வெளியிடக் கஷ்டப்படுகின்றார்கள். தங்கள் சொந்த வீட்டிலேயே அயலார்போல் வாழ்கின்றார்கள். அவர்களின் தாய்மொழியறிவு மிகவும் குறைவு. அதனால், அவர்கள் ஏதாவதொன்றைப் பேச ஆரம்பித்தால் ஆங்கிலச் சொற்களின் உதவியின்றி அதை முடிக்க இயலுவதில்லை.

# தேசியக் கல்வி

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



தமிழ் நாட்டில் தேசியக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி, அதில் தமிழ் பாஷையை ப்ரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அது 'தேசியம்' என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை; இதை மறந்துவிடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரிபூர்ண ஸஹாயத்தை எதிர்பார்க்கவேண்டுமானால், இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும். தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக. தமிழ் நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக......

தேச பாஷையின் மூலமாகவே இந்தச் சரித்திரப் படிப்புமட்டுமேயன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். தேச பாஷையின் மூலமாகப் பயிற்றப்படாத கல்விக்குத் தேசியக் கல்வி என்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடுமன்றோ?......

''...சென்னையில் பிரெஸிடென்ஸி காலேஜ் என்று சொல்லப்படும் மாகாணக் கலாசாலையின் கட்டடம் நமது தேச முறையைத் தழுவியதன்று; பழைய இத்தாலி வழியொன்றை அனுஸரிக்கிறது. இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் ஸர்வகலா ஸங்கங்களின் கட்டிடம் இத்தாலிய முறையிலா கட்டியிருக்கிறார்கள்? அது போலவே பாரத தேச முறைமைப்படி கட்டிய கட்டிடங்களில் கற்றுக் கொடுக்காத கல்வி இங்குச் சுதேசியர் கல்வி என்று சொல்லத் தகுந்த யோக்யதை பெறாது''

இது ஜினராஜதாஸர் சில தினங்களின்முன்பு சென்னைப் பத்திரிகைகளில் பிரசாரம் செய்திருக்கும் ஒரு வ்யாஸத்தின் ஸாரமாம். இதில் கடைசி அம்சம் மிகவும் கவனிக்கத் தகுந்தது. நமது தேசத்து முறைமைப்படி கட்டிய கட்டிடத்திலேயன்றிப் பிற நாட்டு முறைபற்றிக் கட்டிய மனைகளிலேகூடத் தேசியக் கல்வி பயிற்றுதல் ஸாத்யமில்லையானால், ஓஹோ, பாஷை விஷயத்தை என்னென்று சொல்வோம்! தமிழ் நாட்டில் தேசியக் கல்வி கற்பிக்க வேண்டுமானால், அதற்குத் தமிழே தனிக் கருவியாக ஏற்படுத்த வேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

11297

# தாய் மொழியே கல்லூரி மொழி

பல்கலைச்செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M. A., B. L., M. O. L.



எந்த மொழியில் கல்வி கற்பது என்ற கேள்வியே இப்பொழுது இந்தியாவில் எங்கும் எழக் காண்கிறோம். குழந்தை நிலையிலிருந்து உணர்ச்சி ததும்பப் பேசிப் பழகுகிற மொழியே இதற்கு ஏற்றது என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். அத்தகைய மொழியில் எண்ணும்பொழுதுதான் தங்குதடையின்றி அறிவு வெள்ளம் புதுப்புது முறையில் பாய்ந்து புதுப்புது உண்மைகளைக் காணமுடியும். இங்கேயும்கூடப் பழைய நூல்களை உருப்போட்டு ஒப்புவிக்கின்ற பழக்கம் மட்டுமே வளருமானால், அவை எல்லாம் வெறும் சுமையாகி அறிவின் இயக்கத்தை அடியோடு கெடுத்துவிடும். எந்த அறிவும் அறிவுவளர்ச்சிக்குக் கருவியாக அமைந்து மேலும் மேலும் புதிய புதிய அறிவுக் காட்சிகளைக் காண உதவ வேண்டுமேயன்றி அறிவுப் போக்கினைத் தடுத்து அடிமையாக்குதல் கூடாது.

உருப்போட்டுப் பழகிய உலகில் ஆங்கிலேயர்கள் தம் கல்வி முறையைப் புகுத்தியபோது இந்தியர்களை ஆங்கிலத்திலேயே கற்கும்படி செய்தனர். ஆங்கிலமோ குழந்தைமுதல் இந்தியர்கள் பேசிப் பழகிய பேச்சு அன்று. எவ்வளவுதான் ஆங்கிலம் அறிந்தாலும் அது ஆங்கிலேயன் மனத்தை உணர்ச்சிப் பிண்டமாக உருக்குவதுபோல இந்தியர் மனத்தை உருக்கமுடியாது. இந்தியர்கள் தம்முடைய இயல்பான கருத்துக்களை அதில் விளக்குவதும் அரிதேயாம். இதன் காரணமாக ஆங்கிலத்தில் கற்கவந்த இந்தியர்கள் பெரும்பாலும் ஆங்கிலக் கருத்துக்களை அறிவதனை வற்புறுத்துவதைவிட அக்கருத்துக்களை விளக்கும் அழகிய சொற்றொடர்களை உருப்போடத் தொடங்கினர். அவற்றையே திருப்பித் திருப்பி எழுதுவதே அவர்கள் காணும் புதுமையாயிற்று.

இந்த நிலையில் அறிவு புதிய புதிய முடிவுகளைக் காண்பது எங்ஙனம் கூடும்? அறிவு இந்த நிலையில் புதிய புதிய அறிவுப் போக்குகளாம் அழகிய கன்றுகளை ஈன முடியாது மலட்டு வறட்டுப் பசுவாக நின்றொழிந்தது. இங்கே உணர்ச்சி என்கிற பால் சுரப்பதற்கும் வழியில்லாமல் போயிற்று. எனவே, சொற்றொடர்களைப் பழமைபோல் எழுதும்போதும் அவற்றில் தோன்றும் உயிர்த்துடிப்பு ஒன்றும் இல்லாமல் வெறும் புகைப்படங்களாகவே அவை இவர்கள் எழுத்தில் செத்துக் கிடந்தன. இத்தகையவர்கள் படித்ததை ஒன்றும் விடாமல் ஒப்புவிக்கக்கூடும். பெரிய பெரிய கல்விப் பட்டங்கள் இவர்கள் பெறலாம். தேர்வில் முதல்வராகத் தேரலாம். பிற நாடுகளில் சென்று சிறந்த கல்விப் பட்டங்கள்

பெற்று உயரலாம். இவர்களுடைய முயற்சி எண்ணமுடியாத முயற்சி. இவர்களுடைய உளத்திட்பமும் பாராட்டுதற்குரியது. இவைகளில் எல்லாம் இவர்கள் காட்டும் ஊக்கமும் உழைப்பும் அளத்தற்கரியன; ஆனால், அத்தனையும் இவர்கள் மேற்கொண்ட மிக மிககடுமையான பயிற்சியைப் பொறுத்ததேயாகும். ஆனால், இங்கே புதிய விளக்கம் ஒன்றும் தோன்றுவதில்லை. அறிவுதான் வறட்டு மலட்டுப் பசுவாக ஆகிவிட்டதே!

இத்தகைய கல்வி கற்ற அறிஞர் ஒருவர் பேராசிரியர் கிரகாம் வாலசு (Graham Walas)அவர்களை அடைந்தார். இவருடைய படிப்பினையும் முயற்சியினையும் பாராட்டிய அப்பேராசிரியர் இவர் தாமாக ஒன்றையும் எண்ண முடியாமல் பிறர் சொற்றொடர்களையே அழகாகக் கோத்து எழுதுவதனைக் கண்டு திகைத்துப்போயினர். இவரை அவ்வாறு புதிய வழிகளைக் கண்டு புது முறையை எண்ணச் செய்து ஆராய்ச்சி மாணவனாக உயர்த்தக் கூடும் என்று எவ்வளவோ முயன்று தோல்வியே கண்டார். பின்னர் நூல்களோ அறிக்கைகளோ விளக்காத பொருள்களைப் பற்றி உலகில் நேரே கண்டு தெளியுமாறும் மக்களோடு பழகி அறியுமாறும் செய்தார். அப்போதெல்லாம் என்ன என்ன உணர்ச்சிகள் உள்ளத்தே எழுகின்றன என்பதைக் கண்ணும் கருத்துமாக உன்னிப் பார்க்கச் செய்தார். அப்பொழுதும் மாணவர் எடுத்துக்கொண்ட கடிய முயற்சில் ஒரு குறையுமில்லை. ஆனால், உணர்ச்சியில்லாத இயந்திரம்போலவே தாம் இயங்கியதாக அம்மாணவர் கூறினாராம்.

முடிவாக, அம்மாணவரின் தாய்மொழியிலேயே அவருக்கு மிக நெருங்கியதாய்க்கோ, தந்தைக்கோ, தம்பியர்க்கோ எழுதும்படி பேராசிரியர் பணித்தார். அன்பு கனியும் கடிதங்கள் அல்லவா? உணர்ச்சி சிறிது சிறிதாக அவருடைய அறிவினை விளங்கச் செய்தது. அப்போதும் படித்த சொற்றொடர்களை மொழி பெயர்க்கவே முதலில் எண்ணம் தோன்றியது. தாமாக மாணவர் தமக்குரிய தனிமுறையில் சொல்ல முயல வேண்டுமென்று ஆசிரியர் கேட்டுக்கொண்டார். மாணவர்க்கு இது எளிதாகத் தோன்றவில்லை. படித்த சொற்றொடர்களின் சுமை அவரை அவ்வாறு அழித்து இறுக்கிவிட்டது. அன்பு கனியும் தாய்மொழியின் வழியேதான் மெல்ல மெல்ல விடுதலை பெற்றார். ஆழத்தே சென்று ஊடுருவிப் பாயும் கூரிய ஐயங்களை எப்போதும் எழுப்பிக் கொண்டே இருக்க வேண்டுமென ஆசிரியர் அறிவு புகட்டினர். தாய்மொழியில் தாமாக அன்பு கனிய எழுதிவந்த பொழுதுதான் இத்தகைய ஐயங்கள் தலைகாட்டத் தொடங்கினவாம். ஆங்கிலச் சொற்சுமையாம் கடற்கிழவன் கழுத்தைப்பிடித்து இறுக்கும்பொழுது உரிமையான அறிவு எவ்வாறு விளங்குதல் கூடும்? பெருங் குழப்பமே விளைந்தது. பழக்கமில்லாத இந்த நிலையில் மாணவர் பெரிய துயரத்திற்குள்ளாயினர். ஆனால், தாய்மொழி வழியே பழமையினின்றும் மெல்ல விடுபட்டார். உண்மை காணவேண்டும் என்று எழுந்த முயற்சியோடு தாய்மொழி வழியே விளக்குகின்ற நிலையில் ஓர் உணர்ச்சி அவரை உண்மை காணும் போக்கில் தூண்டிவிட்டு முன்னுக்குத் தள்ளியது. 'கண்டறியாதன கண்டேன்' என்று பாடி மகிழ்ந்தார். பழஞ்சுமை நீங்

கியது. அறிவு விடுதலை பெற்றது; புதிய விளக்கம் பெற்று முன்னேறியது. இத்தனையும் தந்தது தாய் மொழியின் விளக்கம், தாய் மொழியின் கனிவு, தாய்மொழியின் விடுதலை, தாய்மொழியின் இன்பம்.

இந்த உண்மையை அப்பேராசிரியர் "எண்ணும் கலை" (The Art of Thought) என்ற நூலில் (பக்கம் 253—255) விளக்குகிறார். நம்முடைய நாட்டில் பல்கலைக் கழகங்கள் பல்குகின்றன. பல்கலைக் கழக அறிஞர்கள் பல்குகின்றார்கள். ஆனால், இவ்வாறு பல்கிப் பெருகுதற்கு ஏற்ற அறிவாராய்ச்சி மிகுந்திருக்கக் காணோம். ஏன்? இதற்குத் தானே விடை கூறுகின்றார் கிரகாம் வாலசு! தமிழ் மொழி வழியே கல்லூரிப்படிப்பும் நிகழவேண்டும் என்பதற்கு வேறு என்ன கூறவேண்டும்? ●

---

# இப்படி நடந்தது

பொருளாதாரப் பேராசிரியர் ஒருவர்; நெடுங்காலமாகப் பாடம் நடத்திவந்தவர். அவரிடம் ஒரு குறிப்பேடு இருக்கிறது. அது அவருடைய ஆசிரியர் பாடம் நடத்திய போது எழுதியது. அந்த ஆசிரியரும் அவருடைய ஆசிரியர் சொன்ன போது எழுதினாரோ என்னவோ, தெரியாது. இப்படியாகக் குரு—சிஷ்ய பரம்பரையாக வந்த குறிப்பை— நோட்சை—வகுப்பிலே படிப்பதும், மாணவர்கள் குருபக்தி சொட்டச் சொட்ட அப்படியே எழுதிக்கொள்வதும் வழக்கம்.

ஒரு நாள் வழக்கம்போல் 1950-ல் ஆசிரியர் சொல்லச்சொல்ல மாணவர்கள் எழுதிக்கொண்டேயிருந்தனர். ஆசிரியர் சொன்னார், "Recently in the year 1900......" மாணவர்கள் அப்படியே எழுதிக்கொள்ள வேண்டியதுதானே!

அரை நூற்றாண்டுக்கு முந்திய காலம் அண்மைக் காலமாக அந்தப் பேராசிரியருக்குப் பட்டது; சொன்னார்; மாணவர்களும் எழுதிக்கொண்டார்கள்.

உண்மை என்னவென்றால், அந்த குறிப்பு 1905-ல் நடந்த ஒரு வகுப்பிலே சொன்னது. அதையே மாணவராய்ப் படித்து, விரிவுரையாளரான பின்னும் படித்து, பேராசிரியராக உயர்ந்த பிறகும் கிளிப்பிள்ளை போலப் படித்தார்.

ஆங்கிலத்தில் சொல்வதெல்லாம் வேதவாக்கு! ஆதலால் பேராசிரியர் கிளிப்பிள்ளை சொல்லியதை எதிர்காலக் கிளிப்பிள்ளைகள் எழுதிக்கொண்டார்கள்.

அன்றாட வாழ்க்கையை ஒட்டி வளரும் பொருளாதாரத்தின் கதை இது! இப்படியே ஒவ்வொரு பாடத்திலும் இருக்கும்.

ஆங்கிலத்தில் பாடம் நடத்துவதால், இதுபோல எத்தனையோ வேடிக்கைகள் நடக்கின்றன.

வேதனைகளும் எத்தனையோ உண்டு.

வகுப்பிலே அன்றாடம் நிகழும் இத்தகைய வேடிக்கைகளையும் வேதனைகளையும் தொகுத்துவைத்துத் தமிழ்ப் பெருமக்களுக்கு விளக்க விரும்புகிறது சிந்தனைக் குழு. அந்தப் பணிக்கு உதவுங்கள். ●

# நம்பிக்கு.....

★

அன்பார்ந்த நம்பி,

உன் பொங்கல்வாழ்த்துக்கிடைத்தது. அதைப் 'பொங்கல் வாழ்த்து' என்று சொல்வதைவிடப் 'பொங்கல் கடிதம்' என்று சொல்வது பொருந்தும். உள்ளத்தின் பொங்கல், உணர்ச்சியின் பொங்கல்!

"உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழியாய், உயர் தெய்வ மொழியாய், தென்னக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாய் விளங்கும் நம் அன்னை மொழி நம் தாயகத்தின் கல்வி நிலையங்களில் பயிற்சிமொழியாகப் பாங்குடன் விளங்குகின்றதா?" என்று ஆர்வத்துடன் கேட்கிருய். உன் ஆர்வம் போற்றற்குரியது. இளமையின் வேகம் தணிந்துவரும் என் உள்ளத்திலும் அது ஆர்வத்தைத் தூண்டுகின்றது

உன் அச்சுக்கடிதத்தின் அடியில் இரண்டு வரிகள் எழுதியிருப்பது பார்த்து மகிழ்ந்தேன். "பிற நாடுகளில் தாய்மொழிக்கு என்ன இடம் தருகிருர்கள்? நம் தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்பு உண்டு என்று நாம் எவ்வளவோ பேசுகிரேமே, அது உண்மைதானு?" என்று கேட்டிருக்கிருய். நீ இவ்வாறு தமிழ் இனத்தைப் பிற இனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க நினைப்பது நல்லது. ஒப்பிடும்போது நம் நிறைகளும் தெரியும், குறைகளும் தெரியும்.

பொதுவாக ஒவ்வொரு இனத்தாரும் தம் நிறைகளைப் பெரிதாகவும், தம் குறைகளைச் சிறிதாகவும் காண்கிருர்கள். தற்பெருமை எல்லா இனங்களுக்கும் உள்ள குறை. நேரடி அனுபவத்திலிருந்து இதைச் சொல்கிறேன். அமெரிக்கப் பல்கலைக் கழகம் சிறிய உலகம் போன்றது. எல்லா நாட்டு மாணவர்களையும் அங்குக் காணலாம். நான் சென்றிருந்த பல்கலைக் கழகத்தில் ஐம்பத்தாறு தேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் கற்றுவந்தார்கள். அது எனக்கு ஓர் அரிய வாய்ப்பாக இருந்தது. எல்லா இனத்தாரும் தம்தம் இனத்தைப்பற்றிப் பெருமையாகவும், பிற இனங்களைப் பற்றிக் குறைவாகவும் எண்ணுகிருர்கள்.

இந்திய மாணவர்க்கும் பிறநாட்டு மாணவர்க்குமிடையே ஒரு பெரிய வேற்றுமை கண்டேன். நமக்குள்ள ஆங்கில மோகம் அவர்களில் ஒருவர்க்கும் கிடையாது. அதிலும், இந்திய நாட்டின் பிற மாநில மாணவர்களைவிட நம் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உள்ள ஆங்கில மோகம் பெரிது. 'என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்' என்று பாரதியார் பாடினுர். 'என்று மடியும் எங்கள் ஆங்கில மோகம்' என்று பாடலாம்போல் தோன்றுகிறது. ஆங்கிலத்தைக் கற்பதில் தவறில்லை. அது சிறந்த மொழி; அதன் இலக்கியம் மிகச் சிறந்தது. ஆங்கிலத்தை நன்ருகக் கற்கலாம். ஆனுல், ஆங்கிலத்தின்பால் **மோகம்** கொள்ள வேண்டாம். ஆங்கிலத்தில் பேசுவதுதான் நாகரிகம் என்றும், நம் தாய்மொழியில் பேசுவது குறைவு என்றும் இன்றும் நாம் கருதுகிரேம். இந்த அடிமை மனப்பான்மை ஒழியவேண்டும் என்கிறேன்.

ஒரு முறை டேனிஷ் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். பல்கலைக் கழகச் சிற்றுண்டிச்சாலையில் 'கோக்' குடித்துக்கொண்டே பலபல பேசினோம். அவருடைய மொழி பேசுவோர் 50 லட்சம் பேர்; நம்மில் ஆறில் ஒரு பங்கே. அவரது நாட்டின் பரப்பு நம் மாவட்டங்கள் இரண்டுக்குச் சமம். ஆனால், டென்மார்க் நாட்டில் எல்லா நிலைகளிலும் டேனிஷ் மொழியில்தான் கல்வி நடக்கிறது. அவருக்கு ஆங்கிலம் நன்றாகப் பேச வராது. ஆனால், அணு பௌதிகத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்துவந்தார். நமக்கு ஆங்கிலம் நன்றாகப் பேசத் தெரியும்; அவ்வளவுதான். டென்மார்க்கில் எப்படியோ அப்படியே எல்லாச் சுதந்திர நாடுகளிலும் தாய்மொழி தலைமை வகிக்கிறது.

தமிழுக்குத் தனிச்சிறப்பு ஏதும் உண்டா என்று கேட்கிறாய். இது பற்றி நான் எண்ணிப்பார்த்தேன். தமிழுக்குப் பல சிறப்புகள் உண்டு. ஆனால், அவை பிற மொழிகளுக்கும் உண்டு. தமிழ் தொன்மையானது என்றால், ஈப்ரு மொழியும் தொன்மையானதே. தமிழ் இலக்கணச் செம்மை உடையது என்றால், வடமொழியும் இலக்கணச் செம்மை உடையதே. தமிழ் சொல்வளமுடையது என்றால், ஆங்கிலமும் அத்தகையதே. தமிழ் இலக்கிய வளமுடையது என்றால், பிரஞ்சும் அப்படியே. இவையெல்லம் தனிச்சிறப்புகள் அல்ல. ஒரே ஒரு தனிச்சிறப்பு தமிழுக்கு உண்டு. தமிழ் மூவாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வாழும் மொழி. தொல்காப்பியம், திருக்குறள் இன்னும் எளிதில் புரியும் மொழி. இச்சிறப்பு வேறு ஒரு மொழிக்கும் இல்லை. இத்தனிச் சிறப்பை உன்னும்போது உள்ளம் உருகுகிறது. தமிழ் நமக்கு மொழியாகத் தோன்றுவதில்லை. மாண்புமிக்க தாயாகக் காட்சியளிக்கிறாள். தமிழ் 'என்றுமுள' அன்னை, நம் நித்தியத் தாய். நம்மை அறியாது, 'அன்னையே நீ வாழி' என்று போற்றத் தோன்றுகிறது. 'எல்லையறு பரம்பொருள் போல்,என்று இறைவனுடன் ஒப்பிடுகிறோம்; 'நின் சீரிளமைத்திறம் வியந்து வாழ்த்தி வணங்குகிறோம்.

அப்போது நான் மேல்நாடுகளிலிருந்து திரும்பிய சமயம். சென்னை ராஜாஜி மன்றத்தில் தமிழ்விழாக் கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். பல ஆண்டுகள் நம்மிலும் மிகவும் மாறுபட்ட சமுதாயத்தில் வாழ்ந்துவிட்டு அப்போதுதான் திரும்பியிருந்த காரணத்தால் தமிழ்நாடே புதுமையாகத் தோன்றிய காலம். அன்று கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய பேராசிரியர் ஒருவர் தமிழ்த்தாய், தமிழ் அன்னை என்றெல்லாம் உணர்ச்சியோடு பேசியது எனக்கு ஒரே புதுமையாக இருந்தது. மொழி என்றால் மொழிதானே, அதனை ஏன் அன்னை என்றும் தாய் என்றும் அழைக்கவேண்டும், மேல்நாட்டில் ஒருவரும் இவ்வாறு ஆங்கில அன்னை, பிரஞ்சுத் தாய் என்று சொல்வதில்லையே என்று நினைத்தேன். அப்போது மேற்கத்திய உலகாயதத் திரை கண்களை மறைத்த காலம்.

கடிதம் நீண்டுவிட்டது ஒன்று சொல்லி முடிக்கிறேன். ஆர்வம் நல்லதே. ஆத்திரமும் நல்லதே. ஆனால். உணர்ச்சியால்மட்டும் நன்மை இல்லை. உணர்ச்சி சிந்தனையுடன் கூடிச் செயலாக உருக்கொள்ளவேண்டும்.

நேற்று உன் தங்கையைக் கண்டேன். உன் கல்விபற்றிக் கவலையுடன் கேட்டார். உன் கல்விபற்றி

எனக்கு எப்பொழுதும் கவலை இருந்தது கிடையாது. நீ சென்ற ஆண்டு எஸ். எஸ். எல். சி. தேர்வில் சிறப்பாகத் தேரியது அப்பாவுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால், நீ இப்போது புகுமுக வகுப்பில் படிக்கிறாய் பல்கலைக் கழகத்தின் இப்புகுமுக வாயிலில் வழுக்கி விழுபவர் ஏராளம் நீ தேரிவிடுவாய். ஆனால், சிறப்பாகத் தேரவேண்டும் அல்லவா? மேலும் சூழ்நிலையில் மாற்றம் பதினாறு ஆண்டுகளாக நீ நம் கிராமத்தில் வீட்டுச் சூழ்நிலையில் வாழ்ந்துவந்தாய். நகரத்தில் விடுதிச்சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறாய். இது நல்ல அனுபவமாக இருக்கும். அவ்வப்போது எழுது. உன் கடிதத்தைக் காண்பதில் எனக்கு மகிழ்ச்சி.

உன் அன்புள்ள,

நல்லையன்.



# ஆங்கிலம் + தமிழ்

டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ்,
M. A., M. Sc., Ph. D.
முதல்வர், அவிநாசிலிங்கம் மனையியற் கல்லூரி.

ஆங்கிலம் இன்று உலக மொழியாகத் திகழ்கின்றது. பல முக்கியப் புத்தகங்கள், சிறந்த பிரசுரங்கள், ஆராய்ச்சி முடிவுகள் யாவும் ஆங்கிலத்தில்தான் வெளிவருகின்றன. அகில உலக மகாநாடுகள் தூது கோஷ்டிகள், ஐக்கிய நாடுகளின் குழுக்கள் முதலியன ஆங்கிலத்தைப் பெரும்பாலும் கையாள்கின்றன. விஞ்ஞானம், தொழிற் கல்வி முதலிய பிரிவுகளில் கலைச் சொற்களிற் பெரும்பகுதி ஆங்கிலத்திலிருந்து பிறந்தன. ஆங்கிலக் கல்வி முறையைப் பின்பற்றிவந்தவர்கள் தான் கல்லூரிகளில் ஆசிரியர்களாக இருக்கின்றனர். ஆங்கிலம் இங்ஙனம் முதலிடம் பெற்றிருப்பதால் உயர்தரக் கல்வியில் அது கருவி மொழியாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற மயக்கம் நமக்கு உண்டாகிறது.

ஆனால், பாடமொழியாக ஆங்கிலம் அமையும்பொழுது எத்துணைப் பேர்களுக்கு உயர்தரக் கல்வி கிடைக்கிறது, அவர்களில் எத்துணைப் பேர்கள் அத்தகைய கல்வியினால் முழுப்பயன் அடைந்து வெளிவருகிறார்கள் என்பதை நோக்கும்போது அது கல்விக்குத் தடையாகவிருப்பது தெரியவரும். சிறுவயதிலிருந்து பேசிப் பழகி வந்துள்ள மொழியில் அனைவரும், கற்றதன் பயனைப்பெறமுடியும். புலன் உணர்ச்சிக்கு அடிப்படையானது கருவிமொழி. நமது ஆழ்ந்த எண்ணங்களைத் தெளிவாக அந்நிய

மொழியில் விவரிப்பதும், புரிந்து கொள்வதும் அநேகருக்கு முடியாத காரியம். தற்காலத்தில் உயர்தரப் பள்ளியில் தாய்மொழியில் கல்வி கற்றபின் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள் ஆங்கிலத்தில் பாடங்களைக் கற்க முடியாமல் தவிக்கும் சங்கட நிலைமையொன்றே இதற்குச் சான்றாகும்.

இந்த மொழிப் பிரச்சினை மற்ற ஆங்கிலமல்லாத நாடுகளை அவ்வாருகப் பாதிக்கக் காணோம். ஐரோப்பிய நாடுகளனைத்திலும் சோவியத் ரஷ்யாவிலும், கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்நாம், பிலிப்பைன் தீவுகள், சீனு, ஜப்பான் முதலிய தேசங்களிலும் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் வரையில் தத்தம் மொழிகளிலேயே கல்வி கற்பிக்கப் பட்டுவருகின்றது. அந்நாடுகளில் ஆங்கிலமொழியின் உதவி சிறிதும் இன்றி உயர்ந்த பிரசுரங்கள், ஆராய்ச்சி முடிவுகள் வெளிவருகின்றன. நமது நாட்டைவிடக் கற்ருேர் தொகையும் அவ்விடங்களில் அதிகமாக இருக்கின்றது.

நமது தேசத்தில் பல இனத்தவர் வெவ்வேறு மொழியினர் இருப்பதால் அத்துணை மொழிகளின் மூலமாகவும் உயர்தரக் கல்வியைப் புகட்டுவது கடினம் எனச் சிலர் கருதலாம். ஆனால், சோவியத் ரஷ்யாவிலுள்ள குடியரசுகளில் 59 மொழிகளிற் பாடம் கற்பிக்கப்படுகிறதென்ருல் நமது நாட்டின் நிலைமை அவ்வளவு சிரமமானதல்லவே!

சமீபத்தில் இந்தப் பிரச்சினையைக் குறித்து அறிஞர்கள் பலரின் கருத்துக்கள் வந்துள்ளன. ஜனநாயகத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நமது அரசினர், வெளி மக்கள் கருத்தை யறிந்து வழிவகுப்பது அவசியம் என்பதை உணர்ந்திருக்கின்றனர். இன்று தேவையானது ஒரு உறுதியுடன், திட்டவட்டமான முடிபு: அதாவது தாய் மொழியில் எல்லாப் பருவங்களிலும் கல்வி கற்பிப்பதென்பது. அந்த முடிவை ஏற்றுக்கொண்ட பிறகு அதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டியது. அங்ஙனம் செய்யும்பொழுது இன்று ஆங்கிலத்தைக் கைவிட்டுவிட்டால் புத்தகங்களுக்கு என்ன செய்வது, கலைச் சொற்களுக்கு எங்குச் செல்வது என்ற தயக்கங்கள் தாமாகவே தீரும். தங்களுடைய புத்தகங்கள் நிச்சயமாகப் பயன்படுத்தப்படும் என்ற உறுதி கிட்டும்போது ஆசிரியர்கள் ஆயிரக் கணக்கான புத்தகங்களை உருவாக்கித் தருவார்கள். அரசாங்கமும், பொதுமக்களும், அவர்களுக்கு ஆதரவு தரும்போது அருங்கருத்துக்களை இனிய தமிழ் மொழியில் வெளியிட முடியும்.

(கலைக் கதிர்-பயிற்சிமொழி மலரிலிருந்து)

இந்தச் சுவடி பற்றிய தங்கள் கருத்துக்களையும் இதன் சிறப்புக்கான அறிவுரைகளையும் தெரிவிக்க வேண்டுகிறோம்.

113297

- சிந்தனைக் குழுவினர்.

தமிழில் முடியும்

# ஆற்றல் சிறப்பு

டாக்டர் திருஞானசம்பந்தம், M. A., Ph. D.

சாவி கொடுக்கப்பட்ட கடிகாரம் மணி காட்டுகிறது. காரணம் என்ன? சாவி கொடுக்கும்போது ஆற்றல் கொடுக்கிறோம். சுருள் கம்பி ஆற்றல் பெறுகிறது. இந்த ஆற்றலைச் செலவுசெய்தே அது இயங்குகிறது. புகைவண்டி வேகமாக ஓடுகிறது. அவ்வேகம் காரணமாக அது ஆற்றல் பெறுகிறது. புகைவண்டியை இயக்குவது நீராவிப் பொறி. அப்பொறியில் நீர் வெப்பம் என்னும் ஆற்றல் பெற்று ஆவியாக மாறி ஆற்றலுடன் புகைவண்டியை இயக்குகிறது.

நாம் பேசும்போது ஒலியுண்டா கிறது. இந்த ஒலியும் ஆற்றலில் ஒருவகையே. நாம் காதால் கேட்கும் ஒலி ஒரு செகண்டு நேரத்தில் இருபது முதல் இருபதினாயிரம் வரையில் அதிர்வு எண் கொண்ட துடிப்புக்களினால் உண்டாகிறது. அதனை விட அதிகமான அதிர்வு எண் கொண்ட ஒலி கேளா ஒலி எனப்படும். இக்கேளா ஒலி புரியும் விந்தைச் செயல்கள் பலவுள்ளன.

இரும்பு காந்தமாக்கப்பட்டபோது வேறொரு காந்தப்பொருளை ஈர்க்கும் ஆற்றல் பெறுகிறது. காந்தப்புலத்தில் ஒரு கம்பிச்சுருளைச் சுற்றுவோமானால் மின்சாரம் கிடைக்கிறது. மின்சார ஆற்றலைப்பற்றி அறியாதார் யாரும் இல்லை என்று கூறிவிடலாம்.

பொருள் வேறு; ஆற்றல் வேறு என்று கருதிவந்தபொய்மையினைப் போக்கியவர் ஐன்ஸ்டைன் என்ற பேரறிஞர். ஒளியின் அளப்பருஞ் சிறப்பினை எடுத்துக் காட்டிய பெருமையும் இவரைச் சாரும். ஒளியினால் உயிர் வாழ்கிறோம்; ஆதலினால், ஒளியின் சிறப்பு பெரும் சிறப்பாகும். இந்த ஒளியின் வேகமே மிகப் பெரிய வேகமாகும். ஒரு செகண்டு நேரத்தில் 186000 மைல் கல் வீதம் வெற்றிடத்தில் செல்லக் கூடியது இந்த ஒளி.

பொருள் அழிந்து ஆற்றலாக மாறும் பான்மை பெற்றது என்று தனது நுண்ணிய அறிவினால் கண்டு கூறினர். அவர் கூறிய $E=M\times C\times C$ என்னும் வாய்பாட்டின்படி, E என்பது ஆற்றல்; M என்பது பொருளின் நிறை; C என்பது ஒளியின் வேகம். இக்கருத்தின் விளக்கமாகவே, அணுக் கருவிலிருந்து ஆற்றலைப் பெறுகிறார்கள். எனவே பொருளும் ஆற்றலாக மாறக்கூடியது. ஆனால், ஆற்றல் அழியாதது.

நிலையாற்றல், இயக்க ஆற்றல், வெப்ப ஆற்றல், மின்சார ஆற்றல் அணுக்கருவாற்றலாகிய பொருள் ஆற்றல் என்று ஆற்றல் பல்வேறு வகைகளில் காட்சி அளித்த போதிலும், என்றும் நின்று பல் தொழில் புரிவது ஆற்றல்என்னும் அழியாச் செல்வமாகும்.

கல்விப் பணி வரிசை—1

# சமூகத்திற்குப் பயனற்றவர்கள்

திரு க. அருணாசலம், M. A., L. T.

பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மொழிகளைக் கற்பதிலே காலமும் ஆற்றலும் வீணாகின்றன. அதிலும் செய்திகளை அந்நிய மொழிமூலம் தெரிந்துகொள்வதென்பது எளிதன்று. மாணவர்கள் பெரும்பாலும் கருத்துக்களைப் புரிந்துகொள்வதை விட்டுவிட்டு வார்த்தைகளை நெட்டுருப் பண்ணுகின்றனர்.

நாட்டில் நடைபெறும் கல்விக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு வேண்டும். கற்பவர்களும் ஆராய்ச்சியாளர்களும் மக்கள் வாழ்க்கையில் தோன்றும் சிக்கல்களைக் கண்டறிந்து அவைகளைப் போக்க வழிவகைகள் காட்ட வேண்டும். இத்தகைய கல்வி முறையும் ஆராய்ச்சியும் நாடு செழிக்க உறுதுணையாக இருக்கும். ஆனால், இன்று நடப்பதென்ன? உயர்தரக் கல்விக்கும் பொதுமக்களுக்கும் தொடர்பில்லை. படித்தவற்றை அண்டை அயலாருக்கு விளங்கும்படி சொல்ல இயலவில்லை. தமக்குள் பேசுவதும் சிந்திப்பதும் ஆங்கிலத்திலேயே. இவர்களைக் கப்பல் ஏற்றி இங்கிலாந்திற்கோ, வேறு ஆங்கிலம் பேசும் நாட்டுக்கோதான் அனுப்ப வேண்டும். இவர்களால் இங்குள்ள சமூகத்திற்குப் பயனில்லை. சமூகச் சூழலிலிருந்து உரம் பெற்று வளர வாய்ப்பில்லை. எனவே இவர்கள் இங்குக் குடும்பத்திற்கும் ஊருக்கும் அந்நியராய் வாழுகின்றனர். இந்நிலையை மாற்றுவதில் காலந் தாழ்த்தலாமா?

உயர்தரக் கல்வி பிரதேச மொழியில்தான் இருக்க வேண்டுமென்பதை முற்றிலும் எதிர்ப்பவர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவு. இவர்களைப்பற்றி நாம் அவ்வளவு கவலைப்படவும் வேண்டியதில்லை. ஆனால், கொள்கையளவில் இதனை ஏற்று நாட்டுமக்களின் நண்பர்களாக நடிப்பவர்கள் இருக்கிறார்களே, இவர்களால்தான் ஆபத்து அதிகம். இவர்கள் சொல்வதென்ன? 'கொள்கை சரிதான். பிரதேச மொழிகளில் போதிய புத்தகங்கள் இல்லையே' என்கின்றனர். 'புத்தகங்களை எழுத ஏற்பாடு செய்யலாமே' என்றால், 'கலைச் சொற்களுக்கு என்ன செய்வீர்கள்' என்கிறார்கள். கலைச் சொற்களுக்காகக் கவலைப்பட வேண்டாம். ஆங்கிலம் அல்லது சர்வதேசச் சொற்களை வைத்துக்கொள்ளலாமென்றால், 'அடடா! அதை நாமே எப்படி முடிவு செய்வது. ஒரு கமிட்டிபோட்டு மக்களாட்சி முறையில்தான் தீர்வுகாண வேண்டு'மென்று கமிட்டி போடுகின்றனர். கமிட்டிகள் வேலை செய்யுமா? இவர்கள் பேச்சுக்களையும் செயல்களையும் பார்த்தால் இவர்களது அந்தரங்க சுத்தியில் சந்தேகம் ஏற்படுகிறது. சரியான கலைச் சொற்களை உண்டாக்கி அவைகளைக் கொண்டு புத்தகங்களை எழுதி வெளிவந்த பின்னர்த்தான் பிரதேச மொழிகளின் மூலம் கற்பிக்க முடியும் என்பது 'அலை அடங்கிய பின்னர்த்தான் கடல் ஸ்நானம்' என்பதை யொக்கும். ●

(கலைக் கதிர் பயிற்சி மொழி மலரிலிருந்து)

கைத்தறி அச்சகம், 3, தாமஸ் வீதி, கோயமுத்தூர்-1.